**மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டம் - பிரிவு I - 2021**

மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டம் - பிரிவு I இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மார்ச் 22 ஆந் திகதி கடன் உடன்படிக்கை இல.(2018) 17 மொத்த இல.(474) இன் பிரிவு 4.6 இன் 4 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. பாதுகாப்பினை அதிகரித்தல்இ போக்குவரத்து நேரம்இ போக்குவரத்து நெரிசல்இ வாகன செயற்பாடு மற்றும் பராமரிப்பு கிரயம் மற்றும் சுற்றுச்சூழல் மாசடைவு போன்றவற்றை குறைக்கக்கூடிய முன்னுள்ள அதிவேகப்பாதை வலையமிப்பினை 36.98 கி.மீ இனால் நீடிப்பதனூடாக கடவத்தை தொடக்கம் மீரிகம வரையான ஒரு அதி வேகப்பாதையினை நிர்மானிப்பதனூடாக மார்க்கங்களிடையே ஒரு உயர் இயக்கத்தினை உறுதி செய்தல் செயற்திட்டத்தின் நேக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 176இ785 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,299.29 மில்லியனானதுடன் அதில் ரூபா 134இ628 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 989.45 மில்லியன் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியினால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மீதித் தொகை ரூபா 42.157 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 309.83 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2020 செப்தம்பர் 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 செப்தம்பர் 14 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மத்திய அதிவேகப்பாதையின் ஒட்டுமொத்த சாத்தியவள கற்கைக்காக கூட்டுமொத்தம் ரூபா 2,193 மில்லியன் ஏற்பட்டிருந்தும்இ அச்செலவினத்தின் உரிய பங்கு இச்செயற்திட்டத்திற்குள் பகிர்ந்தளிக்கப்பட்டிராததுடன் அதன் காரணமாக செயற்திட்டத்தின் செலவினம் அத்தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் அத்தொகையினை கணக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். | செலவினத்தின் உரிய பங்கு செயற்திட்டத்தின் செலவினமாக கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஆ) | அனைத்து நிதியளிப்பு மூலங்களும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.01 இன் பிரகாரம் நிதிநிலைமை கூற்றில் தேறிய சொத்துக்கள;/உரிமையாண்மை இன் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்தும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 150 மில்லியன் தொகையான நிதிகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 150 மில்லியன் தொகையான நிதிகள் கணக்குகளிற்குள் சரியாக எடுக்கப்பட்டுள்ளதுடன் தேறிய விளைவு கூட கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும்இ இச்சீராக்கம் பாரியளவில் பாதிக்கவில்லை. | நிதி மூலங்கள் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.01 இன் பிரகாரம் கணக்கிடப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடவத்த தொடக்கம் கொசின்ன வரையான ஒப்பந்த பொதி 01 ஆனது 2016 ஜுன் 20 இல் கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் வேலைகளின் ஆரம்பிப்பு 2020 செப்தம்பர் 15 வரை தாமதமடைந்திருந்தது. மேலும் ஒப்பந்தத்தின் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி 2023 மார்ச் 14 ஆக இருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிப்பு திகதியிலிருந்து 15 மாதங்கள் கடந்திருந்தும் உண்மையான பௌதீக செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 30.53 சதவீதத்தில் 15.07 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | இரு பொதிகளிலும் பௌதீக செயலாற்றலில் குறைவிற்கான பிரதான காரணம் ஒப்பந்ததாரரின் உத்தியோகத்தரிற்கு கோவிட் தொற்று ஏற்பட்டமைஇ தொடர்ச்சியான நாட்டின் முடக்கல் நிலமைஇ காணி சுவீகரிப்புக்களின் உரிய தரப்பினர்களை தொடர்பு கொள்வதில் கடினங்கள்இ மூலதன பற்றாக்குறைஇ நிர்மான வேலைகளிற்கான பல்வேறு உருப்படிகளை இறக்குமதி செய்வதில் கடினங்கள்இ பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பாதகமான காலநிலையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு என்பனவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் மிருதுவான பூர்த்தியாக்கலிற்கு இலக்கிடப்பட்ட செயலாற்றலை அடைய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொசின்ன தொடக்கம் மீரிகம வரையான ஒப்பந்த பொதி 02 ஆனது 2015 ஆகஸ்ட் 04 இல் கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் வேலைகளின் ஆரம்பிப்பு 2020 செப்தம்பர் 15 வரை தாமதமடைந்திருந்தது. மேலும் ஒப்பந்தத்தின் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதி 2024 செப்தம்பர் 14 ஆக இருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆரம்பிப்பு திகதியிலிருந்து 15 மாதங்கள் கடந்திருந்தும் உண்மையான பௌதீக செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு 30.46 சதவீதத்தில் 20.54 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | இரு பொதிகளிலும் பௌதீக செயலாற்றலில் குறைவிற்கான பிரதான காரணம் ஒப்பந்ததாரரின் உத்தியோகத்தரிற்கு கோவிட் தொற்று ஏற்பட்டமைஇ மூலதன பற்றாக்குறைஇ நிர்மான வேலைகளிற்கான பல்வேறு உருப்படிகளை இறக்குமதி செய்வதில் கடினங்கள் மற்றும் பாதகமான காலநிலையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு என்பனவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் மிருதுவான பூர்த்தியாக்கலிற்கு இலக்கிடப்பட்ட செயலாற்றலை அடைய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வடக்கு அதிவேகப்பாதையின் பொதி 04 மற்றும் பொதி 07 இன் நிர்மானத்தின் கீழ் ஏற்பட்ட செலவுகளை செலுத்துவதில் இயலாமை காரணமாக பெறுகை வழிகாட்டியிற்கு முரனாக 2015 ஜூலை 16 ஆம் திகதிய 15/1021/602/040 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் சீன உலோகவியல் கூட்டுறவு சபைக்கு (ஆஊஊ) ரூபா 158,386 மில்லியன் கிரயத்தில் மத்திய அதிவேகப்பாதை பிரிவு 01 இன் ஒப்பந்தத்தினை வழங்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | அத்தீர்மானமானது பொதுத்திறைசேறியின் ஆலோசனையுடன் பொருளாதார விடயங்கள் மீதான அமைச்சரவை உபகுழுவினால் நியமிக்கப்பட்ட குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரையின் படி எடுக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுகை முறைகள் அரசாங்கத்திற்கு பொருளாதார நன்மைகளை அதிகரிக்கக்கூடிய வகையில் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் சிவில் வேலைகளிற்கான நிதிகள் 2019 மார்ச் 21 இல் கையொப்பமிடப்பட்டு ஓர் கடனாக சீன எக்ஸிம் வங்கியானது வழங்குகின்றது. இருப்பினும் கடனின் பயன்படுத்தல்கள் 2021 திசெம்பர் 31 வரை மீளப்பெறப்பட்டிருக்கவில்லை. இத்தாமதத்தின் பெறுபேறாக பொதி 01 மற்றும் பொதி 02 இன் மீது ரூபா 470.62 மில்லியன் விலைத்தளம்பல்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்ததாரரரிற்கு செலுத்தவேண்டியுள்ளது. | வேலை ஆரம்பிப்பு முற்பண கொடுப்பனவில் தாமதம் காரணமாக இத்தாமதம் ஐபீசி களின் தீர்ப்பனவுகளை தீர்ப்பதில் தாக்கம் செலுத்தியுள்ளதுடன் ஒப்பந்ததாரர் அக்காலப்பகுதியின்போது ஏற்பட்ட விலைத்தளம்பல்களை மீளப்பெற்றிருந்தார். | நிதி ஏற்பாடு செயற்திட்டத்திற்கு மேலதிக கிரயங்களை தவிர்க்க செயற்திட்டத்தினை ஆரம்பிக்க முன்னர் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் பிரகாரம் ஒப்பந்தத்தின் முறையான செயலாற்றலிற்கான செயலாற்றல் பாதுகாப்பு ஒப்பந்ததாரர் அவரது | ஒப்பந்ததாரர் செயலாற்றல் பாதுகாப்பு பத்திர கிரயத்தினை தனியாக பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படாவிட்டால் அசாதாரணமான உயர்வான | அளவைப்பட்டியலின் பரிசீலனை விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கு முன்னர் பெறுகை நிபுணர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | சொந்த கிரயத்தில் பெறவேண்டி இருப்பினும் செயற்திட்டமானது அளவைப்பட்டியலில் ஒரு தனியான உருப்படியாக உள்ளடக்கியிருந்தமை மேற்கூறிய தேவைப்பாட்டிற்கு முறனாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன் பெறுபேறாக கூட்டு மொத்தம் ரூபா 805.43 மில்லியன் அவ் இரண்டு பொதிகளிற்காகவும் செலுத்தப்பட்டிருந்ததுடன் அது ஒப்பந்ததாரரிற்கு தேவையற்ற நன்மைகளிற்கு வழிவகுக்கும். | விகிதங்களை ஏற்படத்தக்கூடிய விகிதங்களிற்குள் உள்ளடக்க அவருக்கு வாய்ப்புள்ளதுடன் ஒப்பந்தத்தின் மொத்த கிரயமும் அதிகரிக்கக்கூடும். | மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | பைலட் வீதிக்கான ஓர் நீரியல் கற்கையினை நடாத்த கூட்டுமொத்தம் ரூபா 4.5 மில்லியனிற்கு இலங்கை காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துடன் 2017 மார்ச் 14 இல் ஓர் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் கூட்டுமொத்தம் ரூபா 2 மில்லியன் 2017 ஜுலை 24 இல் ஓர் முற்பண கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த காலப்பகுதியானது 24 மாதங்களாகவிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 வருடங்களிற்கு மேலாக கடந்திருந்தும் இறுதி அறிக்கை செயற்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரிவு 10.5.ஐஐ இன் பிரகாரம் எஸ்எல்எல்ஆர்டிசி இனால் செயற்திட்ட அலுவலகத்திற்கு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படாததனால் மிகுதி கொடுப்பனவினை தீர்ப்பனவு செய்ய முடியாமலிருந்தது. | நீர்வள கற்கையானது உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்புதலலிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். |
| (உ) | இடைக்கால கொடுப்பனவு பத்திரங்களிலுள்ள கொடுப்பனவு உருப்படிகளிற்கான உண்மையான கொடுப்பனவுகள் அவ் உருப்படிகளின் பீஓகியுவ் பெறுமதியை மிஞ்ச முடியாதிருந்தும் சிவில் வேலைகளின் கீழான சில கொடுப்பனவுகள் பீஓகியுவ் ஏற்பாடுகளினை மிஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அம்மாறல்களிற்கான அனுமதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அம்மாறல்களிற்கான அனுமதியினை பெற உரிய நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | நிதிச்சுமைகளினை தவிக்க பீஓகியுவ் ஏற்பாடுகளிற்குள் செலவுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 காணி சவிகரிப்பு செயன்முறையில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது காணி சுவீகரிப்பு காலப்பகுதியினை 72 வாரங்களிலிருந்து 26 வாரங்களிற்கு குறைக்க விசேட காணி சுவீகரிப்பு செயன்முறை ஒன்றினை அமுல்படுத்தியிருந்தது. மேலும் முதற்கட்டமாக காணிசுவீகரிப்பு செயன்முறை செயற்திட்ட நேர அட்டவணையின் பிரகாரம் 2016 திசெம்பர் 15 இல் பூர்த்திசெய்ய திட்டமிடப்பட்டிருந்தும் அச்செயன்முறை 2022 மே 20 இலான கணக்காய்வு திகதியில் கூட பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிப்பு செயன்முறையின் மிகுதி நடவடிக்கைகள் 2022 மார்ச் 30 இற்கு முன்னர் கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்ததுடன் 4இ210 தனியார் காணித்துண்டுகள் 2022 மார்ச் 30 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்பு செயன்முறை செயற்திட்டத்தின் மிருதுவான செயற்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட காலப்பகுதியினுல் பூர்த்திசெய்யப்பட வேண்டியதுடன் ஊக்குவிப்பு திட்டம் மீளமதிப்பிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருந்த மொத்தமாக 6,733 காணித்துண்டுகளிலிருந்து ஏற்கனவே 4இ210 தனியார் காணித்துண்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் 89 தனியார் காணித்துண்டுகளிற்கான உரிமை மதிப்பீடுகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தாமதத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 4இ210 தனியார் காணித்துண்டுகள் பட்டியலிடப்பட்ட பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 89 காணித்துண்டுகளிற்கான விசாரனைகள் கூட பட்டியலிடப்பட்ட திகதி 2022 மார்ச் 30 இற்கு முன்னர் செய்யப்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்பு செயன்முறை செயற்திட்டத்தின் மிருதுவான செயற்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட காலப்பகுதியினுல் பூர்த்திசெய்யப்பட வேண்டும். |
| (இ) | கூட்டுமொத்தம் ரூபா 30.32 மில்லியன் ஊக்குவிப்பு காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை 26 வாரங்களிற்குள் துரிதப்படுத்தி பூர்த்திசெய்வதற்காக அமைச்சுஇ நிலஅளவை திணைக்களம்இ மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் போன்றனவற்றின் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட பிரிவு 44 இன் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிமையினை மாற்றம் செய்வதனூடாக 364 காணித்துண்டுகள் மாத்திரமே பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. | செயன்முறையினை துரிதப்படுத்த பிரதேச செயலகங்களிற்கு பல்வேறு நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்ததுடன் 793 காணித்துண்டுகளின் உரிமை 2022 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பிரதேச செயலகங்களினால் ஆர்டிஏ விற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. மேலும் ஊக்குவிப்புக்கள் ஒட்டுமொத்த செயன்முறைக்காகவும் செலுத்தப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு கட்டத்தினதும் பூர்த்தியாக்கல் செயன்முறையிலுள்ளது. | காணி சுவீகரிப்பு செயன்முறை செயற்திட்டத்தின் மிருதுவான செயற்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட காலப்பகுதியினுல் பூர்த்திசெய்யப்பட வேண்டியதுடன் ஊக்குவிப்பு திட்டம் மீளமதிப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் 954 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 6,733 காணித்துண்டுகள் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அதில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,704 மில்லியன் 3,535 காணித்துண்டுகளிற்காக மாத்திரம் இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 658.8 மில்லியன் 2,430 காணித்துண்டுகளிற்காக மாத்திரம் தாமத வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது. எனவே இழப்பீடுகளின் கொடுப்பனவுகளில் தாமதமானது காணி உரிமையாளர்களிற்கான வட்டிக்கொடுப்பனவுகளின் அதிகரிப்பிற்கு நேரடியாக தாக்கம் செலுத்தலாம் என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் எனவே அது அரசாங்கத்திற்கு நிதி சுமையினை ஏற்படுத்துகின்றது. | பாதிக்கப்பட்ட மக்களிற்கு இழப்பீடுகளை போதுமான நிதியினை நாங்கள் கோரியிருந்த போது மதிப்பீடுகளில் போதுமான ஏற்பாடுகள் இருந்தும் கூட பொதுத்திறைசேறியிடமிருந்து குறைந்தளவான நிதிகள் கிடைக்கப்பெற்றதனால் முழு இழப்பீட்டினையும் கொடுத்து தீர்க்க முடியாமல் போனதுடன் வட்டியுடனான இழப்பீடுகளின் மிகுதி கொடுப்பனவுகளின் தாமதத்திற்காக செலுத்தவேண்டியிருந்தது. இவ்வகையான கொடுக்கல் வாங்கல்கள் செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு பின்னால் உள்ளது. | நிதி ஏற்பாடுகள் அசாதாரண தாமதங்களை தவிர்க்கவும் இழப்பீடுகள் மீதான தாமத வட்டி கொடுப்பனவை குறைக்கவும் நெறிப்படுத்தப்படல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டமானது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 80 பதவிகள் உள்ளடங்ளாக அனுமதிக்கப்பட்ட ஆளனியினை வைத்திருந்தும் மத்திய அதிவேகப்பாதை செயற்திட்டத்தின் பிரிவு 1 இற்கு இணைக்கப்பட்ட குறித்த ஆளனிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதியினை பெற்றிருக்கவில்லை. | அதிவேகப்பாதையின் ஒவ்வொரு பிரிவினதும் தேவைப்பாடுகளினை கருத்தில் கொண்டு போதியளவு ஆளனி ஆர்டிஏ வினால் ஒதுக்கப்பட்டிருந்தது. | மத்திய அதிவேகப்பாதையின் ஒவ்வொரு பிரிவும் தனியான கடன் வழங்குனர்கள் மற்றும் பீளம்யூக்களை கொண்டுள்ளது. எனவே ஒவ்வொரு பிரிவிற்காகவும் தனியான ஆளனி முகாமைத்து சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கை இல 01/2019 இன் பிரிவு 2.3.2 இன் பிரகாரம் செயற்திட்ட பணிப்பாளர் வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்த முழுநேர அடிப்படையில் எப்போதும் நியமிக்கப்பட வேண்டியிருந்தும் செயற்திட்ட பணிப்பாளர் சுற்றறிக்கை நிபந்தனைகளிற்கு முரனாக பதில் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். | நாங்கள் செயற்திட்ட பணிப்பாளரின் பதவிக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களை நேர்முகப்பரீட்சை செய்துள்ளதுடன் விரைவில் நாங்கள் தெரிவு செய்து செயற்திட்ட பணிப்பாளர் பதவிக்கு தகுதியான மற்றும் அனுபவமுள்ள விண்ணப்பதாரரை நியமித்திருப்போம். | சுற்றறிக்கை நிபந்தனைகள் கண்டிப்பாக பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரதி செயற்திட்ட பணிப்பாளர்இ பெறுகை நிபுனர்இ கள பொறியியலாளர்இ அலுவலக பொறியியலாளர்இ வடிவமைப்பு பொறியியலாளர்இ காணி சுவீகரிப்பு உத்தியோகத்தர் மற்றும் நில அளவையாளர் போன்ற முக்கியமான பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எனவே அவ்வெற்றிடங்கள் செயற்திட்டத்தின் செயலாற்றலினை நேரடியாக பாதிக்கலாம் என கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் சேவை தேவைப்பாடுகளின் அடிப்படையில் செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களின் பிரகாரம் நேரத்திற்கு நேரம் தேவையான உத்தியோகத்தர்களை நாங்கள் நியமித்திருந்ததுடன் அனுமதிக்கப்பட்ட ஆளனியின் பிரகாரம் உத்தியொகத்தர்களை நாங்கள் நியமிப்பதற்கு முன்னர் செயற்திட்டத்தின் ஆளனி தேவைப்பாடுகளை கூட நாங்கள் கடினமாக அவதானித்திருந்தோம் எனவே அது செயற்திட்டத்தின் செயலாற்றலை பாதிக்காது. | தேவையான ஆளனி செயற்திட்டத்தின் மிருதுவான செயற்பாட்டிற்காக நிரப்பப்படல் வேண்டும். |
| (ஈ) | காணி சுவீகரிப்பு நிபுனர்கள் செயற்திட்ட கண்கானிப்பு பிரிவு உத்தியோகத்தர்களாக ஆரம்ப கட்டத்தில் நியமிக்கப்பட வேண்டியிருந்தும் இரண்டு நிபுனர்கள் ஆலோசகரின் ஆளனியின் கீழ் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் திரட்டிய கூட்டுமொத்தம் ரூபா 6.4 மில்லியன் ஆலோசகர் பட்டியலின் கீழ் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. ஆலோசகர் பட்டியலின் கீழான பெறுவனவுகள் மீது 10 சதவீத ஆலோசகர் மேந்தலை கிரயம் சாட்டப்பட்டதன் காரணமாக செயற்திட்டமானது ஓர் மேலதிக கிரயத்தினை ஏற்படுத்த வேண்டியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் செயற்திட்டமானது ஓர் காணி உத்தியோகத்தரினை ஆட்சேர்க்க நிறுவியிருந்தால் அது நீண்ட காலத்தினை எடுக்கும் என்பதுடன் நீண்டகாத்திற்காக சம்பளங்களும் கொடுக்க வேண்டி வரும். எனவே அவ்வாறான ஆட்சேர்ப்புக்கள் பொறியியலாளர் ஊடாக செய்யப்பட்டதுடன் உரிய நடவடிக்கைகள் பூர்த்தியானதன் பின்னர் இடைநிறுத்தப்படும். இது செயற்திட்டத்திற்கு அதிக வினைத்திறன் மற்றும் சிக்கனத்திற்கு சாத்தியமானதாக இருக்கும். | செயற்திட்ட கிரயங்கள் சிக்கனமாக பராமரிக்கப்படல் வேண்டும். |

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **கணக்காய்வாளர் பரிந்துரைகள்** |
|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்து சேவைகள் சுற்றறிக்கை இல 01.:.2019 இன் பந்தி 9.3 இன் பிரகாரம் செயற்திட்ட வழிகாட்டும் குழு இரண்டு மாதங்களிற்கு ஒரு முறையாவது கூடவேண்டியிருந்தும் வழிகாட்டல் குழு மீளாய்வாண்டிற்காக 2021 நவம்பர் 30 இல் மாத்திரமே கூடியிருந்தது. | நாட்டில் கோவிட் நோய்ப்பரவல் நிலமைஇ நாட்டின் முடக்கல் ஒப்பந்ததாரரர் மற்றும் பொறியிலாளரின் உத்தியோகத்தரிற்கு கோவிட் தொற்று மற்றும் பல்வேறு சுற்றறிக்கை நிபந்தனைகள் போன்றன காரணமாக ஒவ்வொரு மாதத்திற்குமான செயற்திட்ட வழிகாட்டல் குழு கூட்டங்களினையும் நிறுத்தவேண்டிய தேவை இருந்ததனால் பிஎஸ்சீ கூட்டங்கள் மாதாந்தம் நடத்த முடியாமலிருந்தது. | செயற்திட்ட வழிகாட்டல் குழுக்கள் செயற்திட்டத்தின் மிருதுவான செயற்பாட்டிற்காக சுற்றறிக்கை நிபந்தனைகளின் பிரகாரம நடாத்தப்படல் வேண்டும். |